# மறுப்பிலக்கியம் - மாற்றிலக்கியம் - திராவிட இலக்கியம்!

பொதுவாக அரசியல் சூழலும் சமூகச் சூழலும்தான் புதிய இலக்கியப் போக்குகளை உருவாக்கும். அந்த விதத்தில்தான் மார்க்சிய சிந்தனை உலகெங்கும் பரவியபோது, அச்சிந்தனையை முன்னிறுத்தும் விதமாக இலக்கியங்கள் எழுதப்பட்டன. கறுப்பின மக்களுடைய போராட்டங்கள் வலுப்பெற்றபோது, கறுப்பின மக்களுடைய வாழ்க்கை இலக்கியங்களாக எழுதப்பட்டன. பெண் உரிமைகள் குறித்த உரையாடல் ஆரம்பித்ததும் உலகெங்கும் பெண்ணிய இலக்கியங்கள் எழுதப்பட்டன. இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தின் தாக்கமும், காந்திய சிந்தனையும் வலுப்பெற்றபோது, அது சார்ந்த இலக்கியங்கள் எழுதப்பட்டன. அம்பேத்கரின் நூற்றாண்டை ஒட்டி எழுந்த அரசியல் விவாதங்களின் மூலம் 'தலித்' இலக்கியம் என்ற வகைமை இந்தியாவில் நிலை பெற்றது. தமிழ்நாட்டில் திராவிட இயக்கச் சிந்தனையும், சமூகநீதிக்கான போராட்டமும் உருவானபோது திராவிட இலக்கியம் உருவானது.

1916இல் சென்னையில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் 1917இல் அரசியல் கட்சியாக மாறி, 1917 முதல் 1937வரை அரசு அதிகாரத்திலிருந்தது. இச்சங்கம் 1917இல் '**திராவிடன்**' என்ற பெயரில் தமிழிலும், '**ஆந்திர பிரகாஷிக**' என்ற பெயரில் தெலுங்கிலும் **Justice** என்ற பெயரில் ஆங்கிலத்திலும் தினசரி நாளிதழ்களை நடத்தியது.

சுயமரியாதை என்ற இயக்கத்தை நடத்திக்கொண்டிருந்த பெரியார் 1944இல் தென்னிந்திய நல உரிமைச்சங்கத்தின் தலைவரானார். தலைவரானதும் தான் நடத்திக் கொண்டிருந்த சுயமரியாதை என்ற இயக்கத்தின் பெயரையும், தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் பெயரையும் மாற்றி திராவிடர் கழகம் என்று 1944இல் அறிவித்தார். அதோடு திராவிடர் கழகம் தேர்தலில் போட்டியிடாது என்ற முடிவையும் வெளியிட்டார். 1949இல் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

**தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக இருந்தாலும், சுயமரியாதை இயக்கமாக, திராவிடர் கழகமாக, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் இவற்றின் அடிப்படை நோக்கமாக இருந்தது சமத்துவமும் சமூக நீதியும் தான்.**

Justice Party என்ற பெயரில் ஒரு அமைப்போ, சங்கமோ, கட்சியோ பதிவுசெய்யப்படவில்லை. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தைத் தான் 'நீதிக்கட்சி' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். அச்சொல்லே நிலைபெற்றுவிட்டது. Justice என்ற நாளிதழின் பெயர்தான் நீதிக்கட்சி என்பதற்கான வேர்ச்சொல். தென்னிந்திய நல உரிமைச் சங்கமும், சுயமரியாதை இயக்கமும், திராவிடர் கழகமும், தி.மு.க.வும், இந்த அமைப்புகள் நடத்திய பத்திரிகைகளும்தான் தமிழ்நாட்டில் திராவிட இயக்க இலக்கியங்கள் உருவாவதற்குக் காரணங்களாக இருந்தன. உருவாக்கின.

நீதிக் கட்சியும், தி.மு.க.வும் அரசியல் அதிகாரத்திற்கு வந்தவை. திராவிடர் கழகம் இன்றளவும் கொள்கை, பிரச்சார இயக்கமாக மட்டுமே செயல்பட்டு வருகிறது.

**மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், புராண இதிகாசங்களின், கடவுளின், நம்பிக்கைகளின், வாய்மொழிக் கதைகளின் பெயரால் எளிய மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகப் போராடுவது, பிரச்சாரம் செய்வது, சமூக மேம்பாடு, முன்னேற்றம், அறிவியல் சிந்தனை என்பதுதான் இந்த மூன்று கழகங்களின் அடிப்படை நோக்கம்.**

தங்களுடைய நோக்கத்தை மக்களிடம் கொண்டுசெல்ல அவை பயன்படுத்திய கலை வடிவங்கள்தான் - கவிதை, சிறுகதை, நாவல், நாடகங்கள், திரைகதை வசனங்கள். தங்களுடைய கருத்துப் பிரச்சாரத்திற்காகத் திராவிட இயக்கங்களும், திராவிட இயக்கப் பற்றுள்ளவர்களும் நடத்திய நாளிதழ்கள், வார, மாத இதழ்களின் எண்ணிக்கை 287க்கும் மேற்பட்டது. இந்த இதழ்களுக்ெல்லாம் தாயாக இருந்தது திராவிடன், Justice என்ற நாளிதழ்களே. ஆங்கில இதழ்களையும் நடத்தியிருக்கிறார்கள். இதழ்கள் நடத்துவதை தங்களுடைய போராட்ட வடிவத்தின் முக்கியமான ஆயுதமாகக் கருதியிருக்கிறார்கள். திராவிட இயக்கங்களும் அவை நடத்திய பத்திரிகைகளும் பெரிய எழுத்தாளர் பட்டாளத்தையே தமிழ்நாட்டில் உருவாக்கியது.

திராவிட இயக்க எழுத்தாளர்கள் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம், திரைக்கதை வசனம் என்று எதை எழுதினாலும் அவற்றின் உள்ளடக்கம்

**சாதி ஒழிப்பு, ஆண்டான் அடிமை முறை ஒழிப்பு, குலத்தொழில், குலக் கல்வி முறை ஒழிப்பு, பெண்ணடிமைத்தன எதிர்ப்பு, சமூகநீதி, புராண, இதிகாச, கடவுள் நம்பிக்கைகள் சார்ந்த, கட்டுக்கதைகளுக்கு எதிர்ப்பு, புனித பண்பாடு, கலாச்சாரம், மனு தர்மம் போன்றவற்றால் கட்டமைக்கப்பட்ட சமூகக் கட்டுமானங்களின் மீதும் வலுவான, அறிவியல்பூர்வமான விமர்சனக் கேள்விகளை எழுப்புவதுதான் திராவிட இயக்க இலக்கியம்.**

வகுப்புவாதத்தோடு சமரசம் செய்துகொள்ளாமல் பகுத்தறிவோடு அடித்தட்டு மக்களின் அவலத்தை உள்ளது உள்ளபடியே எழுதி, அரசியல், கலை, இலக்கிய, பண்பாட்டுத் தளங்களில் பெரிய தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தினார்கள்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற புராண இதிகாசக் கதைகள், தெய்வக் கதைகள், சமூக நம்பிக்கைகள் அனைத்தும் அறிவியலுக்கு எதிராகச் சமூகத்தைப் பின்னோக்கி இழுத்துச் செல்வதாக இருக்கிறது, சமூகத்தை முன்னேற்றப் பாதைக்கு, அறிவியல் பாதைக்கு இட்டுச் செல்ல மறுக்கிறது. ஆகவே, அவற்றை எதிர்த்து, மறுத்து எழுத வேண்டியதன் தேவையைத் திராவிட இயக்க எழுத்தாளர்கள் உணர்ந்து எழுதினார்கள்.

**இராமாயணம், மகாபாரதம், மனு போன்றவற்றுக்கு மாற்றாக சங்க இலக்கியங்களையும், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் போன்ற அறநெறி - நீதிநெறி நூல்களை யும் முன்னிறுத்தினார்கள். தமிழர், தமிழர் நலன், பண்பாடு, கலாச்சாரம், மொழி, தமிழரின் அடையாளம் என்று பகுத்தெடுத்தார்கள். நம் மண் - நம் பெருமை, நம் இலக்கியம் என்ற முழக்கத்தை முன்னெடுத் தார்கள். இலக்கிய அழகியலுக்கு இலக்கிய உத்திகளுக்கு முன்னுரிமை கொடுப்பதைவிடவும் கருத்துப் பிரச்சாரத்திற்கு முன்னுரிமை கொடுத்தார்கள்.**

அதேநேரத்தில் இலக்கிய அழகியலோடு எழுதவில்லை என்று குறைசொல்ல முடியாத அளவிற்குத்தான் எழுதியிருக்கிறார்கள். தங்களுடைய ஒவ்வொரு எழுத்தின் நோக்கமும்

**சமூக மாற்றம், சமூக முன்னேற்றம், சாதி ஒழிப்பு, சுயமரியாதை, பெண்ணடிமைத்தனம் ஒழிப்பு, மனிதனை மனிதனாக நினை- சம நீதி - சமூக நீதி, அனைவருக்கும் கல்வி, வேலைவாய்ப்பில் அனைவருக்கும் இடஒதுக்கீடு, எல்லாருக்கும் எல்லாமும் என்ற அடிப்படை லட்சியத்தில் எழுதினார்கள்.**

வெறும் கருத்துப் பிரச்சாரத்திற்காக மட்டுமே எழுதினார்கள் என்று மட்டுமே சொல்ல முடியாது. திராவிட இயக்க எழுத்தாளர்களில் மிக முக்கியமான அடையாளமாகவும், இன்றும் தமிழ்நாடு மக்களால் போற்றப்படுகின்ற எழுத்தாளராகவும் இருப்பவர் பாவேந்தர் பாரதிதாசன். அவர் எழுதிய '**பிசிராந்தையார்**' என்ற நாடகத்திற்காக 1969ல் சாகித்ய அகாதெமி விருது பெற்றிருக்கிறார். இந்திய இலக்கிய சிற்பிகள் என்ற வரிசையில் திராவிட இயக்க எழுத்தாளர் டி.கே.சீனிவாசன் குறித்து சாகித்ய அகடாமி நூல் வெளியிட்டிருக்கிறது. டி.கே. சீனிவாசன் மட்டுமல்ல இந்திய இலக்கிய சிற்பிகள் வரிசையில் இடம்பெறத் தக்க தகுதி உடைய சிறுகதை மன்னன் என்று போற்றப்பட்ட எஸ்.எஸ்.தென்னரசு, வி.பி.ஆசைத்தம்பி, இராம.அரங்கண்ணல், இளமைப்பித்தன், கே.ஜி.இராதாமணாளன்



**இமையம்**
**எழுத்தாளர்**

போன்ற நூற்றுக்கணக்கான திராவிட இயக்க எழுத்தாளர்கள் இருக்கிறார்கள்.

பண்டிதத் தமிழில் எழுதுவதுதான் இலக்கியம் - மக்கள் பேசும் தமிழில் எழுதுவது இலக்கியமல்ல, கொச்சைத் தமிழ், பாமரத் தமிழ், கொடுந்தமிழ், நீச பாஷை என்று புறக்கணிக்கப்படும் நிலைமையை மாற்றி 'மக்கள் தமிழ்' என்ற முழக்கத்தோடு, புதிய பண்பாட்டு, இலக்கிய, மொழி அரசியலை முன்னெடுத்தார்கள். இவர்தான் எழுத வேண்டும், இன்ன மொழியில்தான் எழுத வேண்டும், இவ்வடிவத்தில்தான் எழுத வேண்டும் என்ற இலக்கிய மேட்டுக்குடி மனப்பான்மையை அகற்றி, எழுத்தில் ஜனநாயகத் தன்மையைக் கொண்டுவந்தார்கள். திராவிட இயக்க எழுத்தாளர்களின் படைப்புகளை **தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி இலக்கியங்கள்** என்று சொல்லலாம்.

திராவிட இயக்க எழுத்தாளர்கள் தங்களுடைய எழுத்தில் எதையெல்லாம் பிரச்சாரம் செய்து எழுதினார்களோ அவற்றில் பல விஷயங்கள் சட்டமாக்கப்பட்டு தமிழ்நாட்டில் செயல் வடிவம் பெற்றுள்ள நிலையில், இனி அந்த எழுத்துகளுக்கு என்ன மதிப்பு இருக்கப்போகிறது என்று யாராவது கேட்டால், அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது இதுதான்:

'**பராசக்தி**' என்ற திரைப்படத்தில் '**அம்பாள் என்னைக்கடா பேசினாள்**' என்று கலைஞர் ஒரு வசனம் எழுதியிருப்பார். அந்த வசனம் இன்னும் பேசுபொருளாக இருக்கிறது. கடவுள்கள் சார்ந்து சமூகத்தில் கலவரங்கள் நடக்கும்போதெல்லாம் கலைஞரின் கேள்வி உயிர் பெற்று எழுகிறது. இந்தியாவில் ஆன்மீகவாதிகள், துறவிகள் என்ற பெயரில் சொத்து சேர்ப்பவர்கள் இருக்கும்வரை கலைஞரின் '**சங்கிலி சாமியார்**' என்ற சிறுகதையும் இருக்கும்.

பிராமணியத்தின் வர்ணாசிரம தர்மம், மனுதர்மம் பற்றி இந்தியாவில் பேச்சு இருக்கும்வரை அண்ணா எழுதிய, '**சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்**' என்ற நாடகம் இருக்கும்.

ராமாயணம் இருக்கும்வரை, அதற்கு மாற்றாக அண்ணா எழுதிய '**நீதி தேவன் மயக்கம்**' என்ற நாடகமும், புலவர் குழந்தையின் '**இராவணக்காவியமும்**' இருக்கும்.

2024 - ஜனவரியில் நடைபெற்ற சென்னை புத்தகக் கண்காட்சியில் அதிகம் விற்பனையான புத்தகப் பட்டியலில் முதல் இடத்தில் இருந்தது - பெரியார் எழுதிய, '**பெண் ஏன் அடிமையானாள்?**' என்பதுதான்.

தமிழ் மொழி என்று ஒன்று இருக்கும் வரை, தமிழினம் என்று ஒன்று இருக்கும் வரை, தமிழ் இலக்கியங்கள், தமிழ் பண்பாட்டு அடையாளங்கள் இருக்கும்வரை - திராவிட இயக்க எழுத்தாளர் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய


**"தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்... தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்"**

என்ற கவிதை வரிகளும் இருக்கும்.

**இராமாயண, மகாபாரதக் கதைகள், மனுதர்மம், வர்ணாசிரம தர்மம், பிறப்பின் அடிப்படையிலான மேல் கீழ் என்ற இழிவுகள், ஜாதி, மத, இன, வர்க்க வேறுபாடுகள், பெண்ணடிமைத் தனம், மூடநம்பிக்கைகள், பண்பாடு, கலாச்சாரம் போன்ற சமூகக் கட்டுமானங்கள் தமிழ்நாட்டில், இந்தியாவில் இருக்கும்வரை - அவற்றிற்கு எதிராகக் குரல் எழுப்பும் ஆயுதங்களாகத் திராவிட இயக்க எழுத்தாளர்களும், எழுத்துகளும் இருக்கும்.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. இராசமாணிக்கம்
### ஜுன் 26 (2016)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீது பற்றுக் கொண்டு, மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

நாகை நிலவள வங்கி தலைவராகவும், நாகை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், கீழையூர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

1971–ல் நாகை சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## விவசாயிகள் மனு கொடுத்த ஏழு நாட்களில் தீர்வு!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனுக்கு விவசாயிகள் நன்றி!

*சிவகங்கை ஜுன் 26 -*

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட சாக்கோட்டை மேற்கு ஒன்றியம் சிறிய எட்டு ஊராட்சிகளை கொண்ட ஒன்றியம் ஆகும். இந்த ஒன்றியத்தில் அதிக அளவில் கண்மாய்கள் குளங்கள் உள்ளது.சாக்கோட்டை மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட படையாணிப்பட்டி முத்துப்பட்டினம் பழைய ஆத்தங்குடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிராமத்து மக்கள் விவசாயிகள் தங்களது கிராமத்தில் நீண்ட காலமாக பராமரிக்கப்படாத பழைய கண்மாய் மடையினை சீரமைத்து தருமாறு பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி தலைமையில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் இந்திராணி, மலர் மற்றும் கிராம மக்கள் விவசாயிகள் கடந்த சில தினங்களுக்கு முன்அமைச்சரும் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான கேஆர்.பெரிய கருப்பனிடம் கோரிக்கை மனு கொடுத்தார்கள்.

அந்த கோரிக்கை மனுவினை உடனடியாக நிறைவேற்றி தருமாறு மாவட்ட ஆட்சியர் திட்ட இயக்குனர் ஆகியோருக்கு அமைச்சர் கேஆர் பெரிய கருப்பன் பரிந்துரை செய்தார். அமைச்சரின் பரிந்துரையினை ஏற்று மாவட்ட ஆட்சியர் படையாணிப் பட்டி முத்துப் பட்டினம் பழைய ஆத்தங்குடி ஆகிய கிராமங்களில் உள்ள கண்மாய் மடைகளை சீரமைக்குமாறு உத்தரவிட்டு ஆணை பிறப்பித்துள்ளார்.


இதற்கு கிராம மக்கள் விவசாயிகள்தமிழக முதல்வர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர் கேஆர் .பெரிய கருப்பனுக்கு நன்றி தெரிவித்துள்ளார்கள்.

ஏற்கனவே அமைச்சர்கேஆர்.பெரிய கருப்பன் தொடர் முயற்சியால் சாக்கோட்டை மேற்கு ஒன்றியத்தில் ஓ.சிறுவயல், ஆற்காடு, மாலையிட்டான் பட்டி, ஆலத்திப்பட்டி, திருவேலங்குடி, சூரக்குடி, சொக்கலிங்கம் புதுார், செட்டிநாடு, சேனாதிப்பட்டி, கொத்தமங்கலம்,வடகுடி ,பொத்தேரி, உள்பட 20 கிராமங்களில் கன்மாய்கள் சீரமைப்பு மணி நடைபெற்று வருகிறது.

தற்போது சாக்கோட்டை மேற்குஒன்றியத்தில் 25க்கும் மேற்பட்ட கண்மாய்கள் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இது விவசாயத்திற்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்று கிராம மக்கள் விவசாயிகள் அமைச்சருக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சொ. துரைசண்முகம்
### ஜுன் 26 (2014)



இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழக உறுப்பினரானார்.

அப்போதைய செங்கல்பட்டு மாவட்ட பிரதிநிதியாகவும், திருவான்மியூர் வட்டக் கழகப் பொறுப்பாளராகவும், கழக நிர்வாகத்தில் திருவான்மியூர் சென்னை மாநகர் மாவட்டத்திற்கு வந்தபோது பொதுக்குழு உறுப்பினராகவும், வேளச்சேரி பகுதிக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**